**சப்ரகமுவ மாகாண சபை - 2013**

சப்ரகமுவ மாகாண சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச்

சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சப்ரகமுவ மாகாண சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்குரிய மாகாண சபை நிதியக் கணக்கு 2014 மார்ச் 31 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

மீளாய்வாண்டிற்குரிய 2014 யூன் 30 இல் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் செயன்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 28 | 28 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | - | 01 |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர் களுக்கானமுற்பணக் கணக்குகள் | 25 | 23 | 02 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 05 | 03 | 02 |
| (v) | நிதியக் கணக்குகள் | 03 | 02 | 01 |
| (vi) | நியதிச் சட்டக் கணக்குகள் | 03 | 03 | - |
| (vii) | அமைச்சர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 02 | 02 | - |
| | | 67 | 61 | 06 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறுங்கால முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,371,763,492 தொகையான மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,500,000,000 கூட்டுத்தொகையான நிலையான வைப்புக்கள் 02 உண்மையாக 2014 சனவரி 02 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டிருந்தமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் காசு மீதி ரூபா 1,500,000,000 தொகையால் குறைவாகவும் முதலீட்டு மீதி அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சப்ரகமுவ மாகாணத்தின் விதி 309 இன் பிரகாரம் நிதியாண்டின் இறுதியில் கூடியளவு விரைவில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண திறைசேரிப் புத்தகங்களில் கண்டறியப்பட்டவாறு மாகாண சபை நிதியத்திற்கு ஒரே வகையிலான சொத்துக்களும் வரவு மீதிகளும் பொறுப்புகளும் செலவு மீதிகளும் தொடர்பான ஓர் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்வு செய்யப்படுவதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் மாகாண சபை நிதியத்தால் உருவான ரூபா 594,654,941 தொகையான சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சப்ரகமுவ மாகாண சபையின் நானாவித கட்டளைச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட 04 நிதியங்களும் 03 அதிகார சபைகளுக்குரிய நிதிநிலைமைகளும் நிதி விளைவுகளும் மாகாண சபை நிதி தொடர்பான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிராமையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மூலம் ஒட்டுமொத்த சப்ரகமுவ மாகாண சபையின் நிதிநிலைமைகளும் நிதி விளைவுகளும் வெளிக்காட்டப் பட்டிருக்கவில்லை.

### 2.2.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 316,788,589 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/ அறிக்கைளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 346,881,278 ஆக இருந்தமையால் ரூபா 34,728,310 ஆன இணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 35,334,392 தொகையானதுடன் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,366,218 ஆக இருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 54 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 255,032,913 ஆக இருந்தது.

#### (ஆ) கணக்காய்வுக்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் 07 நிறுவகங்களுக்குரிய ரூபா 25,898,268 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் அஹலியகொட சுகாதார மருத்துவ அதிகாரியின் அலுவலகத்திற்கு 2013 ஆம் ஆண்டிற்கு உரித்தாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடைமுறை மற்றும் சமூக

சுகாதார பரிசோதனை உத்தியோகத்தர்களால் 2013 ஆம் ஆண்டின் போது 06 நிறுவகங்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு அறிக்கைகள் உள்ளடங்கிய கோவைகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2009 செப்தம்பர் 15 ஆம் திகதிய உள்நாட்டு இறைவரி பிரதி ஆணையாளரின் (பெறுமதி சேர் வரி) கடிதம் | மீள அறிவிக்கப்படும் வரை பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ள ஒப்பந்தக்காரருக்கு 02 அமைச்சுக்கள்/ திணைக்களங்களால் 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,160,708 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) கல்வி அமைச்சுச் செயலாளரின் 2011 மே 11 ஆம் திகதிய ஈடீ/01/12/10/ 06/01 மற்றும் 2011/18 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2010 மே 31 ஆம் திகதிய 2010/21 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3:1 மற்றும் 13:1 ஆம் பந்தி | ஒரு வகுப்பிற்காக சேர்க்கப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 42 ஆன போதிலும் மாவனல்ல கல்வி வலயத்தின் பாடசாலையொன்றில் 1 ஆம் தரத்திலிருந்து 5 ஆம் தரம் வரை 15 வகுப்புகளில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கைக்கு மிகையாக 273 மாணவர்கள் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (இ) சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தின் 1998 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய சிற்றுண்டிச்சாலை வருமானச் செலவினங்களுக்கு உரித்தான பொதுச் சுற்றறிக்கை இல. 02/86/98 | |
| (i) 2.1 ஆம் பந்தி | நலன்புரிச் சங்கங்களைச் செயற்பாட்டில் |

---

| | | |
|---|---|---|
| | | கேள்வி கோரப்பட்டு சிற்றுண்டிச் சாலை நடாத்தப்படுவதன் மூலம் பெற்றுக்கொள்ளும் மாதாந்த வாடகை உள்ளடங்கலான சகல வருமானமும் நலன்புரிச் சங்கத்தின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் வங்கியில் வேறான கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு இதற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலையின் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட வாடகை வருமானத்தின் ரூபா 686,380 தொகையான வாடகை வருமானம் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படாது செலவினத்தைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) 2.4 ஆம் பந்தி | சிற்றுண்டிச்சாலை வருமானத்தில் பணத்தைச் செலவிடுவதற்கு முன்னர் தீர்மானமான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து குறித்த அதிகாரிகளின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேற்குறித்த வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலை நவீனமயமாக்கலுக்காக ஏற்கப்பட்ட ரூபா 425,517 கூட்டுத்தொகையான செலவினம் தொடர்பாக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 கொள்வனவு வழிகாட்டல் கோவையின் தொடர்பு 8:12 இன் 05 ஆம் பந்தி | கல்வி அமைச்சினால் 2012 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் முதல் 2013 யூன் வரை 65 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 9,599,105 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு உரிய மாதிரியில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதிக்கோவை | |
| | (i) நிதி விதி 118 | 02 நிறுவகங்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 757,905 கூட்டுத்தொகையான தொகை |

வங்கியிலிடப்படாது 02 - 30 நாட்கள் வரையான காலப்பகுதியாக கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) நிதி விதி 261.2.2 — மாகாண கல்வி திணைக்களம் மற்றும் 02 வலயக் கல்வி அலுவலகங்களிலிருந்து மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 1,770,996 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 16 முதல் 150 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்ததுடன் இரத்தினபுரி மாவட்டத்தின் 02 வலயக் கல்வி அலுவலகங்களால் முன்னர் வழங்கப்பட்டிருந்த துணைக் கட்டுநிதி தீர்க்கப்பட்டிராத 27 சந்தர்ப்பங்களில் ரூபா 1,519,514 கூட்டுத்தொகையான கட்டுநிதி மீள வழங்கப்பட்டிருந்தது.

## 2.4 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்

நிதி ஆணைக்குழு செயலாளரின் 2013 மார்ச் 01 ஆம் திகதிய எப்சீ/பீஆர்&பீ/ஜீஎல்/2013 ஆம் இலக்க கடிதத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அவ் விடயம் தொடர்பாக பொறுப்பை ஏற்கும் அமைச்சில் அல்லது திணைக்களத்தில் உத்தியோகத்தர்கள் கடமை நாட்களில் வளப் பகிர்வாளர்களாக தொடர்படுத்தப்படுவதாயின் வளப் பகிர்வாளர்கள் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியாத போதிலும் இதற்கு முரணான வகையில் மாகாண கல்வி திணைக்களத்தினதும் இரத்தினபுரி மாவட்டத்தின் வலயக் கல்வி அலுவலகங்கள் 02 இலிருந்தும் 44 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது வளப் பகிர்வுக் கொடுப்பனவாக ரூபா 203,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 03. வருமான முகாமைத்துவம்

## 3.1 கடந்த 05 ஆண்டுகளின் வருமான உழைப்பு

கடந்த 05 ஆண்டுகளின் போது மாகாண சபையால் சேகரிக்கப்பட்ட வரி வருமானம் மற்றும் வரியல்லாத வருமானம் பின்வருமாறு காணப்பட்டன.

| ஆண்டு | வரி வருமானம் | வரிஅல்லாத வருமானம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2008 | 1,012,846,946 | 251,306,994 |
| 2009 | 1,146,644,488 | 271,623,594 |
| 2010 | 1,382,363,156 | 321,209,919 |
| 2011 | 1,943,637,444 | 416,079,145 |
| 2012 | 2,007,749,583 | 496,404,402 |

---

### 3.2 நிலுவை வருமானம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சப்ரகமுவ மாகாண சபையின் 08 பிரதேச செயலகங்களால் பல்வேறு நிறுவகங்களுக்கும் தனிநபர்களுக்கும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளுக்கும் கட்டிடங்களுக்கும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவிய ரூபா 23,962,767 கூட்டுத்தொகையான நீண்ட கால வாடகையும் ரூபா 2,236,725 கூட்டுத்தொகையான வருடாந்த வாடகை 2014 செப்தெம்பர் மாதம் வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டதுடன் இது தொடர்பாக 1996 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 96/05 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவின் படி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலவிய புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்திற்கு உரித்தான ரூபா 165,000 தொகையான நீர் வரிப் பெறுமதியும், 02 பிரதேச செயலகங்களுக்கு உரித்தான ரூபா 292,932 கூட்டுத்தொகையான வருடாந்த காணி அனுமதிப்பத்திரக் கட்டணமும் 2014 ஒக்டோபர் வரையிலும் அறவிடப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது.

(ஆ) அஹெலியகொட பிரதேச செயலகப் பிரிவில் தனியார் நீர், மின்சார செயற்திட்டமொன்றில் நீர்க்குழாய்கள் பொருத்தப்படுவதற்காக வருடாந்த வாடகைத் தொகை அறவிடப்படுகையில் பிரதான மதிப்பீட்டாளரால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியின் படி வாடகை கணிப்பிடப்பட்டிராமையால் 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான வாடகைத் தொகையாக ரூபா 209,980 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(இ) மாகாண வருமானத் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட வருமானக் குறியீடு 04 இன் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வருமானக் கூட்டுத்தொகை ரூபா 34,871,991 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 8,421,456 தொகை மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வருமானக் குறியீட்டின் படியும் நிலுவை வருமானச் சேகரிப்பு முன்னேற்றம் 0.8 சதவீதத்திலிருந்து 27 சதவீதம் வரையான வீச்சிலான குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.3 சப்ரகமுவ மாகாணத்தின் 21 உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது பிரதான செயலாளருக்குக் கிடைக்கப்பெற்றிருந்த நீதிமன்றத் தண்டப் பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 20,921,374 தொகை 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் உரிய உள்ளூராட்சி நிறுவகங்களுக்கு செலுத்த வேண்டியிருந்தது.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 1,916,626,676 மிகையாக இருந்ததுடன், அதனை ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 578,643,467 ஆக இருந்தது.

### 4.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

மாகாண சபையின் 15 அமைச்சுக்கள்/ திணைக்களங்களிற்கு எதிராக வெளித்தரப்பினரால் தொடரப்பட்டிருந்த 139 சட்ட நடவடிக்கைகளும் 2 அமைச்சுக்கள்/ திணைக்களங்களால் வெளித்தரப்பினருக்கு தொடரப்பட்டிருந்த 03 சட்ட நடவடிக்கைகளும் 2013 திசெம்பர் வரையில் விசாரணை நிலையில் காணப்பட்டன.

### 4.3 செலவினங்களின் வழமைக்கு மாறான அதிகரிப்பு

மீளாய்வாண்டின் போது உள்ளபடியான செலவினம் 2012 ஆம் ஆண்டின் உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் மீளாய்வாண்டின் 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு உரித்தான உள்ளபடியான செலவினம் 2012 ஆம் ஆண்டின் செலவினத்தைப் பார்க்கிலும் 56 சதவீதத்திலிருந்து 214 சதவீதம் வரையான வீச்சில் வழமைக்கு மாறாக அதிகரித்திருந்தது.

## 05. அதிகாரசபைக் கணக்குகள்

(அ) கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை 16 நிறுவகங்களுக்காக விற்பனை செய்யப்பட்ட ரூபா 862,576 கூட்டுத்தொகையான இறுதி இருப்பு, 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை வேலைத் தளத்திலிருந்து அகற்றப்படாதிருந்தது. அப் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்த சகல விற்பனைகள், கடன் விற்பனையானமையால் அக் கடன் விற்பனை பட்டியல்கள் இரத்துச் செய்யப்பட்டு இருப்பில் எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை வெரலுப கைத்தறி நிலையத்தின் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 04 வியாபாரக் கூடங்களில் 02 வியாபாரக் கூடங்களுக்காக 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவை வாடகை வருமானக் கூட்டுத்தொகையான ரூபா 211,000 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கள கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரப்படி வழங்கப்படுவதற்கு உரித்து இல்லாத போதிலும் இதற்கு முரணான வகையில் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பொது முகாமையாளருக்கு மீளாய்வாண்டின் போது மேலதிகப் படிப்பணமாக ரூபா 76,267 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் லீவு நாட் சம்பளமாக ரூபா 20,340 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அபிவிருத்தி உற்பத்தி மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 46,654,421 கூட்டுத்தொகையான மொத்த கடன்பட்டோரின் 62.4 சதவீதம் ஒரு வருடத்திற்கு மேல் பழைமைவாய்ந்த மீதிகளைக் கொண்டிருந்ததுடன் ரூபா 9,827,378 தொகையான கடன்பட்டோர் மீதி செயற்பாடற்ற கடன் மீதியாக தொடர்ந்தும் முன்கொண்டுவரப்பட்டிருந்தன. இவற்றில் ரூபா 2,334,254 தொகையான இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதியொன்றும் உள்ளடங்கியிருந்தது.

(ii) 2013 மார்ச் 04 ஆம் திகதிய டீஈசீஎம்ஏ/ஏடீ/05/பத்திரிகை அறிவித்தல் எனும் இலக்கக் கடிதத்தின் மூலம் நாளாந்தம் பத்திரிகை ஒன்றில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் இணைப்பில் அதிகாரசபைக்காக வர்ணமூட்டப்பட்ட முழுமையான ஓர் பக்கத்தை ஒதுக்கித் தருமாறு கோரி ரூபா 232,960 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப் பத்திரிகை இணைப்பில் நிறுவகத்தின் பெயரில் எவ்வித அறிவித்தலும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

(iii) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2009 ஏப்ரல் 29 ஆம் திகதிய பீஈடீ 58 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி

முறையான வகைப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்படாது 2011 ஒக்டோபர் 19 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2011 மே 01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் அபிவிருத்தி ஆக்கம் மற்றும் இயந்திர உபகரண அதிகாரசபை ''சீ'' தரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டு உரிய பதவிக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தால் ''சீ'' தரத்திற்கு உரித்தாக்கப்பட்டிருந்த கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) அதிகாரசபையின் இலாப வீதங்களைக் கருத்திற்கொள்கையில் மொத்த இலாப வீதம் 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்களைக் கொண்டிராத போதிலும் தேறிய இலாப வீதம் 13.5 சதவீதத்திலிருந்து 2.23 சதவீதமான மறைப் பெறுமதியை வரை குறைவைக் காண்பித்ததுடன் நிர்வாகச் செலவின வீதம் 32 சதவீதத்திலிருந்து 63 சதவீதம் வரையான இரு மடங்கால் அதிகரித்துக் காணப்பட்டது. இதன் படி 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 10,694,853 தொகையான இலாபம் அறிவிக்கப்பட்டிருக்கையில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,734,891 தொகையான நட்டம் அறிவிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக அதிகாரசபையின் நிர்வாகச் செலவினம் அதிகரித்து இதற்கு ஒப்பான வருமானம் உயர்வடையாமையும் அவதானிக்கப்பட்டது.

(v) 2011 ஆம் ஆண்டின் போது தமது உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள அதிகாரசபை, கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதிலும் 2014 யூன் 13 ஆம் திகதி வரையிலும் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக நிதியமொன்றை ஆரம்பித்திருக்கவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

மாகாண சபையின் மீளாய்வாண்டின் மூலதனச் செலவினத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாடும் உள்ளபடியான செலவினத்தையும் கருத்திற்கொள்கையில் 04 அமைச்சுக்களின் கட்டுநிதி கிடைக்கப்பெறாமையின் காரணமாக ரூபா 691,477,416 கூட்டுத்தொகையான மூலதன ஏற்பாடு எஞ்சியிருந்ததுடன் அந் நிலை மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பாதகமான தாக்கத்தை விளைவிக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் நிலையான வைப்பு மீதி ரூபா 3,371,763,492 தொகையானதுடன் பல வருட காலமாக நிலவிவரும் அந்

நிதியம் பயன்படுத்தப்பட்டு மேற்குறித்த கட்டுநிதி கிடைக்கப்பெறாமையால் செயற்படுத்தப்படுவதற்கு முடியாத அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உள்ள வாய்ப்பை ஆராய்ந்தறிந்து அவற்றை அமுலாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 முகாமைத்துவ திறனின்மை

கணக்காய்வாளரால் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது விதிக்கப்பட்ட மிகைக்கட்டண சான்றிதழுக்கான பணத்தை அறவிடப்படுவது தொடர்பாக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252 அதிகாரத்தின் 226(5),(6) ஆம் பிரிவின் கீழும் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அதிகாரத்தின் 183(5) ஆம் பிரிவின் கீழும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(8),(9) மற்றும் (10) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டவாறு செயற்பட்டிராத காரணத்தால் 1971 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட மிகைஅறவீட்டுச் சான்றிதழ்களின் மூலம் மீளாய்வாண்டின் இறுதியில் 38 மிகைஅறவீட்டுச் சான்றிதழ்களின் கீழ் ரூபா 2,270,627 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 6.3 செயற்பாட்டுத் திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாயம், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகள் அமைச்சால் ரூபா 322,655 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பொல்பெம்ம நிர்அணை நிர்மாணிப்பு தொழில் கணக்காய்வால் இரண்டாவது தடவையும் பரீட்சிக்கப்பட்ட 2014 செப்தெம்பர் 17 ஆம் திகதி வரையிலும் நிர்மாணிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், தொழிலின் மூலம் ஒரு போகத்திற்கும் நீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சிற்கு 2010 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த நிறுவகத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த என்என்12/10 ஆம் இலக்க மற்றும் 2010 மே 10 ஆம் திகதிய ரூபா 981,000 பெறுமதியான செயலாற்றல் பிணை போலியானதென கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இம் மோசடிச் செயல் தொடர்பாக இரத்தினபுரி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மாஅதிபதி மற்றும் விசேட குற்றப்புலனாய்வு பிரிவிற்கு முறைப்பாடு செய்திருந்த போதிலும் 2014 ஒக்டோபர் மாதம் வரை அவ் விசாரணை நிறைவேறியிராததுடன் இது தொடர்பாக அமைச்சின் பின்தொடர் நடவடிக்கைகள் மந்த கதியில் காணப்பட்டது.

(இ) ரூபா 1,929,714 தொகையான கிரயத்தில் 180 லீற்றர்கள் அடங்கிய 112 தார் பீப்பாக்கள் தெஹியோவிட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காரணத்தால் அவை சேதமுற்றிருந்ததுடன் போதிய களஞ்சிய வசதிகள் இன்மையால் இந் நிலை ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2006 ஆம் ஆண்டின் போது சுகாதார சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில் ஊருவல மருந்தகத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் 2012 யூலை மாதம் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது பற்றைகள் வளர்ந்து காணப்பட்டதுடன் இதற்கு 2 கிலோ மீற்றர்கள் வரையான தூரத்தில் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு மருந்தகம் நடாத்தப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(உ) மாவனல்ல கல்வி வலயத்தின் பாடசாலையொன்றில் நூலகம் கறையானால் சேதப்படுத்தப்பட்டிருந்ததுடன் பழுதுபார்க்கும் தேவைப்பாடு உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பாதுகாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கறையானால் சேதமாக்கப்பட்ட 106 நூலகத்தின் புத்தகங்கள் 2011 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது சேதமாக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுச் சந்தர்ப்பமாகிய 2014 சனவரி 28 ஆம் திகதி வரையிலும் 03 புத்தக இறாக்கைகள் சேதமடைந்த வண்ணம் காணப்பட்டது.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் 11 ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 21:1 ஆம் உப பிரிவின் பிரகாரம், முறையான ஒழுக்காற்று விசாரணை நடுநிலைக் குழுவாக நியமிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர், தாமதமின்றி அல்லது ஒழுக்காற்று அதிகாரப்பொறுப்புடையவரால் நியமிக்கப்பட்ட கால எல்லைக்குள் அல்லது உரிய முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டு தாமதமின்றி விசாரணை அறிக்கை ஒழுக்காற்று அதிகாரப்பொறுப்புடைய உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் உள்ளூராட்சி திணைக்களத்தால் பேணப்படும் பல்வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக 34 கோவைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2014 மே 12 ஆம் திகதி வரையிலும் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரை ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் தாமதம் நிலவியது.

(எ) உள்ளூராட்சி திணைக்களங்களால் உள்ளூராட்சி நிறுவக உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உறுப்பினர் முற்பணத்தின் கீழ் தவணைப்பணம் அறவிடப்படுகையில் எவரேனும் உறுப்பினருக்கு மாதாந்தக் கொடுப்பனவு உரித்தற்ற சந்தர்ப்பத்தின் போது உரிய

தவணைப்பணம் அவரிடமிருந்து அறவிடப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளரூடாக பிரதான அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படுவது சபையின் பொறுப்பான போதிலும் 15 இரத்தினபுரி பிரதேச சபை உறுப்பினர்களிடமிருந்து மீளாய்வாண்டிற்காக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 82,000 தொகையை அறவிடப்படுவதற்காக 2014 ஒக்டோபர் 13 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இம் முற்பணத்தை வழங்குகையில் உடன்படிக்கையின் 02 ஆம் பிரிவின் படி உரிய ஆவணங்களின் மூலப் பிரதிகள் உள்ளூராட்சி ஆணையாளருக்கோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற முகவருக்கோ 2012 ஆகஸ்ட் 05 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 18 உள்ளூராட்சி நிறுவகங்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் 133 பொது மக்கள் முகவர்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 19,890,000 தொகையான கடன் தொகைக்காக 1 ½ வருட காலம் கடந்திருந்த போதிலும் உடன்படிக்கையின் மேற்குறித்த பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பலாங்கொடை கல்வி வலயத்தின் பாடசாலை ஒன்றில் குளிரூட்டப்பட்ட கணனி நிலையம் ஒன்றை ஸ்தாபித்திருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 நவம்பர் வரை இது எவ்வித பயன்பாடும் இன்றி மூடப்பட்டிருந்தது. பொருட் பட்டியல் புத்தகத்தின் படி 13 கணனிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டின் போது இதில் 02 கணனிகள் காணாமற்போயிருந்ததுடன் மேலும் 07 கணனிகளின் பெறுமதிவாய்ந்த உதிரிப்பாகங்கள் கழற்றி அகற்றப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் படி இந் நட்டம் தொடர்பாக அப்போதிருந்த அதிபர் பொறுப்புக் கூற வேண்டும் என அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஒக்டோபர் 16 ஆம் திகதி வரை நட்டத்தின் பெறுமதி தீர்மானிக்கப்பட்டிராததுடன் உரிய அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சால் சபரகமுவ மாகாணத்தில் உள்ள தோட்ட மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தி சுவதிவ் மத்தியநிலையத்தின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 3,185,000 தொகை இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதில் செயற்திறனின்மை காரணமாக ரூபா 1,110,818 தொகை செலவிடப்படாது மீள சுகாதார அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) இரத்தினபுரி மாவட்டத்தின் ரக்வானை மாவட்ட வைத்தியசாலையின் 12 உயிரியல் மருத்துவ உபகரண வகைகளின் 41 அலகுகளும், 06 வகையான அலுவலக உபகரணங்களின் 72 அலகுகளும், 15 வைத்தியசாலை உபகரணங்களின் 404 அலகுகளுமாக பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டன. மேலும், கேகாலை

மாவட்டத்தின் மஹபல்லேகம பிரதேச வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் சிகிச்சை சேவைகளுக்கான அத்தியாவசியமான 12 உபகரண வகைகளின் பற்றாக்குறை நிலவியதுடன் பிரசவ அறையின் அவசர விளக்கு (Emergency lamp) செயலிழந்து காணப்பட்டது. மேலும், கூரையில் கூரைத்தகடு உடைந்திருந்த இடங்களில் மழை பெய்யும் போது பிரசவ அறை நனைவதும் கண்டறியப்பட்டது.

(ஓ) அஹெலியகொட மாவட்ட வைத்தியசாலையில் பாதுகாப்பு சேவைகளை வழங்குவது தொடர்பாக உடன்படிக்கையின் நிபந்தனை இல. 06 இன் படி, பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் ஒருவர் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 221,400 தொகையும், உடன்படிக்கையின் நிபந்தனை இல. 06 இன் படி தலைமைப் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு நாளொன்றுக்கு ரூபா 615 படியும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நாளொன்றுக்கு ரூபா 580 படியும் சம்பளமாகச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் முறையே அவ் உத்தியோகத்தருக்கு ரூபா 450 தொகையும் ரூபா 400 தொகையுமாக செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 454,425 தொகைப் படி ரூபா 675,825 கூட்டுத்தொகையான பணம் உடன்படிக்கை நிபந்தனைகள் மீறப்பட்டு ஒப்பந்தக்காரரால் உழைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஔ) அஹலியகொட சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்தின் மருந்துப்பொருள் இருப்பின் பௌதீக ஆய்வின் போது 07 வகையான மருந்துகள் தொடர்பாக 500 – 20000 அலகுகள் வரையான வீச்சில் மாற்றம் அவதானிக்கப்பட்டதுடன் 03 வகையான மருந்துப் பொருட்களுக்கு 30,000 அலகுகள் 02 ஆண்டுகள் முதல் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் காலாவதியாகி இருந்ததுடன் இரத்தினபுரி மாவட்டத்தின் 02 வைத்தியசாலைகளில் 23 வகையான மருந்துப் பொருட்கள் 02 மாதங்கள் முதல் 01 வருடம் வரையான காலப்பகுதியாக நிலுவையாகக் காணப்பட்டன.

(க) 1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் முரண்களுக்காக மாதாந்தம் 02 உணவு மாதிரிகள் மாத்திரமே அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஒக்டோபர் மாதமளவில் அஹெலியகொட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் 06 பொது மக்கள் சுகாதார ஆய்வுப் பகுதிகளுக்காக 15 உணவு மாதிரிகள் மாத்திரம் பகுப்பாய்விற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்டவாறு அச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(கா) அஹெலியகொட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் 03 பொது மக்கள் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளுக்கு உரித்தான 04 நீர் செயற்திட்டங்களின் நீர் மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டிருந்ததுடன் அந் நீர் மாதிரிகளில் பக்டீரியா அடங்கியமை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராததுடன் இது தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) குருவிட்ட பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த எனினும் நிச்சயமாக கிடைத்த திகதி அறிவிக்கப்படாது 37 கொடுப்பனவுப் பத்திரங்களும் 11 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் வேலை நிறைவேற்றப்பட்டு 222 காணிப் பத்திரங்கள் 2014 செப்தெம்பர் 24 ஆம் திகதி வரையிலும் உரிய கொடுப்பனவு/ அனுமதிப்பத்திரம் பெற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) 2001 ஆம் ஆண்டின் ஓபநாயக்க பிரதேச செயலாளரால் கையேற்கப்பட்டிருந்த ரூபா 592,375 மதிப்பீட்டுப் பெறுமதியான 26 காணிப் பிரிவுகளுக்காக 2014 செப்தெம்பர் 24 ஆம் திகதி வரை நட்டஈட்டுத் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(கு) இரத்தினபுரி மாநகர சபையில் கடமையாற்றிய காலப்பகுதியின் போது மோசடியான நடவடிக்கை தொடர்பாக 2011 மார்ச் 22 ஆம் திகதி முதல் 2011 நவம்பர் 29 ஆம் திகதி வரை வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த தற்போதைய யட்டியன்தொட்ட பிரதேச சபையில் கடமையாற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் முறையான ஒழுக்காற்று நடவடிக்கையில் 2011 நவம்பர் 30 ஆம் திகதி முதல் மீள சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். எவ்வாறெனினும், முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படாது மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் PPSC/ES/07/F1/04/01/2 ஆம் இலக்க மற்றும் 2013 யூலை 03 ஆம் திகதிய கடிதத்தின் படி இவ் உத்தியோகத்தர் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) 01 ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்தப்பட்டிருந்தார்.

(கூ) 2012 ஆம் ஆண்டின் போது பிரதான அமைச்சால் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காக ரூபா 29,394,416 கூட்டுத்தொகைப் பெறுமதிக்கு 200 கணனி இயந்திரங்கள், UPS இயந்திரங்கள் மற்றும் கணனி அச்சீட்டு இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கல்வித்துறை வேறான அமைச்சாக வேறான பின்னர் இவ் உபகரணங்களிலிருந்து கல்வி அமைச்சிற்கு 100 இயந்திரங்கள் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. இதன் படி, வைத்துக்கொள்ளப்பட்ட இயந்திரங்களில் ரூபா 11,873,288 கூட்டுத்தொகையான 79 கணனி இயந்திரங்கள், 79 UPS இயந்திரங்கள் மற்றும் 85 அச்சீட்டு இயந்திரங்கள் 2013 செப்தெம்பர்

25 ஆம் திகதி வரையிலும் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(கெ) கேகாலை மாவட்டத்தின் 02 பிரதேச செயலகங்களுக்கு இடருக்குட்பட்ட 62 பேருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான ரூபா 565,500 இற்காக சமூக நலன், நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமக் கைத்தொழில் அமைச்சினால் கோரல்கள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் 2014 பெப்ரவரி 03 ஆம் திகதி வரை அத் தொகை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(கே) கொடக்கவெல வைத்தியசாலை காணியின் மேற்பகுதிக்காக நிலையான பாதுகாப்பு வேலி இல்லாதிருந்ததுடன் வைத்தியசாலைக் காணியின் ஓர் பகுதி எல்லைக் குடியிருப்பாளர்களால் அத்துமீறி குடியேறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. வைத்தியசாலைக் காணியின் மேற்பகுதி எல்லையில் உள்ள தனிப்பட்ட வீட்டிற்காகச் செல்வதற்காக வைத்தியசாலை காணியூடாக ஓர் பாதை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அப் பகுதியில் பாதுகாப்பு வேலையின் கம்பிகள் அறுக்கப்பட்டு பாதை தயாரிக்கப்பட்டிருந்தது.

(கை) 2007 இன் 11 ஆம் இலக்க நுளம்புகள் பெருக்கத்தைத் தடுக்கும் அதிகாரச்சட்டத்தின் மூலம் பொது சுகாதார பரிசோதக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நுளம்புகள் பெருகும் இடங்களைக் கொண்டிருக்கும் நிறுவகங்களுக்கும் நபர்களுக்கும் எதிராக நேரடியாக வழக்குத் தாக்கல் செய்யும் அதிகாரத்தின் கீழ் 2012 முதலாவது காலாண்டின் போது 55 வழக்குகள் தொடரப்பட்டு ரூபா 196,000 தொகையான தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்த போதிலும் 2012 ஏப்ரல் முதல் கணக்காய்வுத் தினமாகிய 2013 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை மேற்குறித்த அதிகாரச்சட்டத்தின் கீழ் அம்பிலிபிட்டிய சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தால் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2012 ஆம் ஆண்டின் போது 248 டெங்கு நோயாளிகளும் 2013 செப்தெம்பர் முடிவில் 154 டெங்கு நோயாளிகளும் அறிக்கையிடப்பட்டிருந்தனர்.

(கொ) சுகாதார போசனை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மூலம் மருந்துகளின் தரம் குறைவடைந்ததன் காரணமாக மருந்துகளின் இருப்பு பயன்பாட்டிலிருந்து அகற்றப்படுவதற்கு எழுத்து மூலம் அறிவித்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவித்தல் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுவதற்கு தாமதமான காரணத்தால் சபரகமுவ மாகாணத்தின் 03 வைத்தியசாலைகளுக்கு தரத்தில் குறைவான மருந்துகள் பயன்படுத்தப்பட்டு முடிந்திருந்தமையும் பாரிய அளவில் நோயாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

(கோ) விலங்கின உற்பத்தி மற்றும் விலங்கின சுகாதார திணைக்களத்தின் மூலம் கால்நடை வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்களில் கண்காணிப்பின் கீழ் பால் விற்பனை நிலையங்களை நிர்மாணிப்பதற்கு அவ் 05 நிறுவகங்களுக்கும் சில ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 67,639,425 கூட்டுத்தொகையான குளிரூட்டியும் அதிகுளிரூட்டி உள்ளடங்கலாக 13 உபகரணங்கள் 2013 ஆம் ஆண்டு வரையில் 05 மாதங்கள் முதல் 04 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்பட்டமை கண்டறியப்பட்டதன் மூலம் பால் விற்பனை நிலையங்களுக்காக பொருட்கள் வழங்கப்படும் செயற்பாட்டில் பின்தொடர் நடவடிக்கைகளில் நலிவுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 6.4 மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் மேம்பாடுகள்

மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த 09 மாகாண வீதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு கள ஆய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கைத்தொழிலின் பெயர் | 2013.12.31 இன் செலவினம் | ஆய்வுத் திகதி | அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| பொத்துபிட்டிய இலும்பகந்த வீதி நவீனமயமாக்கல் | 1,165,483 | 2013.11.12 | வீதியின் மேற்பரப்பு சம அளவால் 80 சதவீதம் உடைந்து குளிகள் ஏற்படல் |
| சிதுருபிட்டிய கொலம்பகம வீதியின் பக்கச் சுவர் நிர்மாணிப்பு | 153,011 | 2013.11.13 | பக்கச் சுவருக்கு உட்பக்கத்தில் கற்களைப் பதிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| ஆடல்ல கமேகந்த வீதியை அபிவிருத்தி செய்தல் | 2,700,521 | 2013.11.12 | தார் பகுதி கழன்று கற்கள் வெளிப்பட்டிருந்தன. |
| மொறதொட்ட அமுவத்தை வீதிப் பராமரிப்பு | 891,213 | 2013.11.05 | இரண்டாம் முறை இடப்பட்ட தார் கழுவப்பட்டமை, வீதி உடைந்திருந்தமை |
| தெமுவாத்த திகன்தல வீதிப் பராமரிப்பு | 2,009,428 | 2014.02.11 | இரண்டாம் முறை இடப்பட்ட தார் கழன்றிருந்தமை. |
| தோராகல முதல் கச்சிகல வீதிப் பராமரிப்பு | 932,358 | 2013.08.23 | வீதி முறையாக பதனிடப்பட்டமையால் வீதியின் |

| | | | |
|---|---|---|---|
| | | | மேற்பரப்பின் சில இடங்களில் இறக்கம் காணப்பட்டது. |
| கோட்டுவே கெதர கொங்கிரீட் இடல் | 370,000 | 2013.08.25 | வீதி முழுவதும் வெளிப் பகுதியில் பாரியளவில் ¾ அங்குல கற்கள் வெளிப்படுதல். |
| தோராகல மெத்கத்வெல 03 எலபார நிர்மாணிப்பு | 651,032 | 2013.08.23 | முறைப்படி பதனீடு மேற்கொள்ளப்பட்டிராமையால் 500 மீற்றர் பகுதியில் 1.5 மீற்றர் குழியும் 400 மீற்றர் அளவில் 20 மீற்றர் தூரத்தில் பாரியளவில் குழிகள் காணப்பட்டமை |
| முவகம பலிபத்கொட வீதி மேம்படுத்தல் | 2,485,809 | 2013.03.08 | வீதியின் மேற்பரப்புப் பகுதி உடைந்து வெடிப்பிற்குள்ளாக்கப்பட்டுக் காணப்பட்டது. |

## 6.5 வெளிப்படையான முறைகேடுகள்

அம்பிலிபிட்டிய மற்றும் பலாங்கொடை கல்வி வலயத்தின் 02 பாடசாலைகளால் 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 144,552 தொகையான மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் உருவாகியிருந்தன.

## 6.6 நிதியத்தின் குறைவான பயன்பாடு

2002 திசெம்பர் 04 ஆம் திகதிய கல்வி அமைச்சுச் சுற்றறிக்கை இல. HRD/PPM/2002/30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் செயற்படுத்தப்பட்ட கல்வி தரப்பயன்பாட்டு கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான வழிகாட்டல் கைநூலின் பந்தி இல. 21.1 இன் பிரகாரம், பாடசாலைத் தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு தரமான பயன்பாட்டிற்கான பணம், ஆண்டின் போது செலவிடப்பட வேண்டிய போதிலும் 04 இரத்தினபுரி மாவட்டத்தின் வலயக் கல்வி அலுவலகங்களிற்கு உரிய 372 பாடசாலைகள் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் பெறப்பட்ட தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 37,655,096 கூட்டுத்தொகையான செலவினம் செய்யப்படாது வங்கிக் கணக்குகளில் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 6.7 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

மாகாண சபைக்குரிய பல்வேறு நிறுவகங்களில் பின்வருமாறு விபரிக்கப்பட்டவாறு பௌதீக வளங்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் தன்மை | எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்றுக் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | காணி | 19 | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | 01 ஆண்டு முதல் 08 ஆண்டுகள் வரை |
| (ஆ) | கட்டிடம் | 29 | 76,207,544 | 09 மாத – 08 ஆண்டுகள் |
| (இ) | வாகனம் | 23 | சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | 05 ஆண்டுகள் |
| (ஈ) | இயந்திர உபகரணம் | 24 | 1,146,198 | 13 ஆண்டுகள் |
| (உ) | மருத்துவ உபகரணம் | 38 | 4,675,143 | 03 மாத – 52 ஆண்டுகள் |
| (ஊ) | அலுவலக உபகரணம் | 594 | 13,666,687 | 08 மாத – 09 ஆண்டுகள் |
| (எ) | ஏனையவை | 1479 | 695,155 | 01 ஆண்டு – 09 ஆண்டுகள் |

## 6.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்

மாவனல்ல கல்வி வலயம் மற்றும் கேகாலை கல்வி வலயத்திற்கு உரித்தான 04 பாடசாலைகளின் 1336 நூலகப் புத்தகங்களின் பற்றாக்குறையும் 125 வகையான பொருட்பதிவுப் பொருட்களின் பற்றாக்குறையும் கண்டறியப்பட்டிருந்த போதிலும் சபரகமுவ மாகாண சபையின் நிதி விதி 55.1.3 இன் படி பற்றாக்குறையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.9 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 அமைச்சுக்களால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த 04 நிர்மாணிப்புகளுக்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட விலைகள்

சரியாக பயன்படுத்தப்பட்டிராமை, உள்ளபடியான அளவீடுகள் சரியாக பெற்றுக்கொள்ளப்படாமை போன்ற காரணங்களால் ரூபா 262,435 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பலாங்கொடை வலயக் கல்வி அலுவலகத்தால் ஒரு பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணிப்பு தொடர்பாக ரூபா 100,922 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(இ) 2007 ஏப்ரல் 12 ஆம் திகதிய 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தப்பட்டது) அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு முதல் பெறுமதி சேர் வரியில் 1/3 பிடித்து வைக்கப்பட்டு உள்நாட்டு வருமான ஆணையாளருக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் ரூபா 120,703 தொகையான பெறுமதி சேர் வரியில் 1/3 பகுதி பிடித்து வைக்கப்படாது ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் வரி பொருட்பட்டியலில் இருக்க வேண்டிய தகவல்கள் குறிப்பிட்டிருந்த போதிலும் 14 ஒப்பந்த நிறுவகங்கள் சமர்ப்பித்திருந்த முழுமையற்றதும் ஒரே நோக்கில் போலி பொருட் பட்டியலாக இனங்காணப்படக்கூடிய 446 பெறுமதி சேர் வரி பொருட் பட்டியல்களுக்கு ரூபா 478,037,742 பெறுமதியான பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) கஹவத்தை ஆதார வைத்தியசாலையில் வைத்திய நிபுணரின் உத்தியோகபூர்வ விடுதியின் திருத்தத்தின் II ஆம் கட்டத் தொழில் ரூபா 4,585,261 இற்கு ஏற்படுத்தப்பட்ட வேலைப் பெறுமதிக்கு திருத்தப்பட்டிருந்ததுடன் சுவர்களினுள் பூச்சிடப்படுவதற்காக ரூபா 304,818 கூட்டுத்தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உட்பகுதி பூச்சிடலின் 12 மீற்றர் நீளமான சில பகுதிகளில் வெடிப்பு ஏற்பட்டிருந்தமை 2013 செப்தெம்பர் 18 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது கண்டறியப்பட்டது.

(உ) மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சால் செயற்படுத்தப்பட்ட பதலங்கல நீர் செயற்திட்ட நிர்மாணிப்புக் கைத்தொழிலுக்காக அச் செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய மேல்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு கிணறுகளும் 2011 ஆம் ஆண்டின் போது இந் நீர் செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த மோட்டார் இயந்திரம் இருக்கையில் இது தொடர்பாக முறையான கவனம் இன்றி ரூபா 141,542 தொகை செலவிடப்பட்டு புதிய கிணறொன்றும் ரூபா 167,720 தொகை செலவிடப்பட்டு புதிய இயந்திர அறையொன்றும்

நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## 6.10 தாமதமான செயற்திட்டங்கள்

04 அமைச்சு/ திணைக்களங்களால் செயற்படுத்தப்படும் 10 நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் பல்வேறு காரணங்களால் தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.11 பதவியணி நிர்வாகம்

### 6.11.1 கல்வித் துறையின் பதவியணி மிகையும் பற்றாக்குறையும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சப்ரகமுவ மாகாண சபையின் ஒவ்வொரு வலய அலுவலகங்களிற்கும் உரித்தான பாடசாலைகளில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்படுள்ளன.

| | இரத்தினபுரி வலயம் | | பலாங்கொடை வலயம் | | எம்பிலிபிட்டியவ வலயம் | | நிவித்திகல வலயம் | | கேகாலை வலயம் | | மாவனல்ல வலயம் | | தெஹியோவிட்ட வலயம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை |
| அதிபர்கள் | - | **84** | - | **47** | - | **43** | - | 82 | - | **93** | - | **66** | - | **62** |
| ஆசிரியர்கள் **1.**ஆரம்ப நிலை | - | **68** | - | **87** | - | **175** | - | **181** | - | **95** | - | **119** | - | **175** |
| **2.**இரண்டாம் நிலை | - | **144** | - | **325** | - | **365** | - | **294** | 100 | **236** | **493** | **60** | - | **364** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சப்ரகமுவ மாகாண ஆசிரியர் சேவையினதும் அதிபர் சேவையினதும் இடமாற்றச் செயல் நடவடிக்கையின் 3.7.1 ஆம் பிரிவின் பிரகாரம் மிகவும் விருப்புடைய பாடசாலைகளில் 06 ஆண்டுகள் அல்லது விருப்புடைய பாடசாலைகளில் 08 ஆண்டு சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள்/ அதிபர்களால் கோரல்கள் முன்வைக்கப்பட்டிராத போதிலும் சேவைத் தேவைப்பாட்டின் நிமித்தம் கட்டாய இடமாற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உட்பட வேண்டிய போதிலும் இதற்கு மாறாக இரு வலயக் கல்வி அலுவலகங்களின் 211 பாடசாலைகளுக்கு உரித்தான குறித்த காலப்பகுதியை விஞ்சிய 1204 ஆசிரியர்களும் 61 பாடசாலை அதிபர்களும் 62 பிரதி அதிபர்களும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இரத்தினபுரி மாவட்டத்தின் 03 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு உரித்தான 03 பாடசாலைகள் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இரண்டாம் தரங்களுக்கு உரித்தாக மேவப்படாத 1736 குறைந்த காலப்பகுதி காணப்பட்டது. இதன் காரணமாக 02 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு உரித்தான 06 பாடசாலைகள் 2012 ஆம்

ஆண்டின் போது க.பொ.த (சா.த) பரீட்சையில் 09 பாடங்களுக்கு உரித்தான நூதனசித்தி சதவீதம் 33 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான உயர் வீச்சைக் கொண்டிருந்தது.

(இ) 2003 நவம்பர் 07 ஆம் திகதிய கல்வி அமைச்சுச் சுற்றறிக்கை இல. 2003/38 இன் பிரகாரம் பாடத்தைக் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் வாரத்திற்கு சராசரி 40 நிமிடங்களைக் கொண்ட 35 பாடவேளையையும், பாடத்தைக் கற்பிப்பதற்கு மேலதிகமாக வகுப்பிற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் ஒரு வாரத்திற்கு அத்தகைய 33 பாடவேளையையும் உயர் தர ஆசிரியர்கள் ஒரு வாரத்திற்கு 30 பாடவேளையையும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய போதிலும் அம்பிலிபிட்டிய வலயத்தின் 02 பாடசாலைகளால் இதற்கு மாறாக பாடவேளைகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் 2013 ஆம் ஆண்டின் போது 36 ஆசிரியர்களால் 9530 பாடவேளைகளான அதாவது 6353 பாடவேளைகள் மாத்திரமே கல்வி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) அம்பிலிபிட்டிய வலயத்தில் ஆசிரிய நியமன வகைப்படுத்தலின் படி 452 ஆசிரியர்கள் மிகையாக இருந்ததுடன், 468 ஆசிரியர்களின் பற்றாக்குறையும் நிலவியதுடன் 468 பேரின் பற்றாக்குறை மிகையான ஆசிரியர்களின் எண்ணிக்கையால் மேவப்படுவதற்கு இயலுமை இருக்கையில் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அம்பிலிபிட்டிய கல்வி வலயத்தின் 07 பாடசாலைகளில் பட்டப் படிப்பை முடித்துக்கொண்ட 12 ஆசிரியர்களும் 03 பாடசாலைகளின் ஆசிரியர் சேவையில் 07 ஆசிரியர்களும் எவ்வித பாடத்திற்கும் ஈடுபடுத்தப்பட்டிராததுடன் கேகாலை கல்வி வலயத்தின் ஓர் பாடசாலையில் எவ்வித கடமையும் மேற்கொள்ளாத மூன்று ஆசிரியர்களுக்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2013 செப்தெம்பர் வரையில் ரூபா 2,387,901 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பலாங்கொடை கல்வி வலயத்தின் ஓர் பாடசாலையில் 14 வகுப்புகளில் 06 பாடங்களுக்காக ஆசிரியர்களை ஈடுபடுத்துகையில் 18 ஆசிரியர்களுக்கு ஒரே வகுப்பில் ஒரே பாடத்தைக் கற்பிப்பதற்காக ஒரு வாரத்திற்கு 106 பாடவேளைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

### 6.11.2 சுகாதாரத் துறையின் பதவியணி மிகைகளும் பற்றாக்குறையும்

சுகாதாரத்துறையில் ஒவ்வொரு சேவைகளிலும் ஊழியர் மிகை அல்லது பற்றாக்குறை என்பன வெவ்வேறு நிறுவன மட்டமாக கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | | இரத்தினபுரி பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் இரத்தினபுரி மாவட்ட வைத்தியசாலைகள | | கேகாலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் கேகாலை மாவட்ட வைத்தியசாலைகள் | | எம்பிலிபிட்டிய ஆதார வைத்தியசாலைகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை | மிகை | பற்றாக்குறை |
| மருத்துவர்கள் | - | **5** | **5** | 15 | 20 | 35 | 4 | 9 |
| தாதிகள் | - | 1 | - | 66 | - | 21 | - | 36 |
| மருந்தாளர்கள் | - | - | - | 3 | - | 8 | - | 15 |
| பொது சுகாதார பரிசோ தகர்கள் | - | - | - | 7 | - | 1 | - | - |
| குடும்ப சுகாதார உத்தி யோகத்தர் | - | - | - | 69 | - | 44 | - | 5 |
| தொழிநுட்பவியலாளர் | - | - | - | 51 | - | 17 | - | - |
| உதவியாளர் | - | - | - | 96 | - | 51 | - | 34 |
| தொழிலாளர் | - | - | - | 27 | - | 8 | 1 | - |
| மொத்தம் | **-** | **06** | **05** | **334** | **20** | **185** | **05** | **99** |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் மேலும் அவதானிக்கப்பட்டது.

கேகாலை மாவட்டத்தின் 02 வைத்தியசாலைகளின் பதவியணியில் 109 பேரின் பற்றாக்குறை நிலவியதுடன் மேலும் வைத்தியசாலையின் தாதிகள், மருந்து கலப்பவர்கள், மருந்தாளர்கள் போன்ற பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிராமையால் உரிய செயற்பாடுகள் உதவியாளர்களால் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது.

## 6.12 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 மாதங்கள் கடந்து வழங்கப்பட்ட எனினும், கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 3,746,992 கூட்டுத்தொகையான 459 காசோலைகள் தொடர்பாக சப்ரகமுவ மாகாண நிதி விதி 283.4 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 06 மாத காலம் கடந்து தேறாத ரூபா 2,458,053 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 15 வங்கிக் கணக்குகளுக்கு உரித்தான இனங்காணப்படாத வரவு வைப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,258,985 தொகையானதுடன் 15 வங்கிக் கணக்குகளுக்கு உரித்தான இனங்காணப்படாத செலவு வைப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 5,477,631 ஆகக் காணப்பட்டது.

## 6.13 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

05 அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ நிறுவகங்களால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,914,355 கூட்டுத்தொகைப் பெறுமதியான முறையற்ற தன்மையிலான 05 கொடுக்கல்வாங்கல்கள் ஏற்பட்டிருந்தன.

## 6.14 போதியளவில் நிறைவேற்றப்படாத நோக்கங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயத் திணைக்களத்தின் மூலம் 50 சதவீதமான மானியத்தின் கீழ் ரூபா 120,000 தொகை செலவிடப்பட்டு கலவான விவசாய உசாவுகை அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ் இளைஞர் விவசாய அமைப்புகளின் அங்கத்தவருக்கு 2012 திசெம்பர் 28 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த 13 லீற்றர் பிரஷர் குக்கர் கணக்காய்வுத் தினமாகிய 2013 திசெம்பர் 06 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்டு 11 மாதங்கள் கடந்திருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருநதமையால் மானியம் வழங்கப்பட்ட நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொடபல்ல குடிசைக் கிராமம் பொது சேவை நிலையமாக திருத்தப்படுவதற்காக ரூபா 1,829,725 செலவிடப்பட்டு பொது வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், தொடர் கண்காணிப்பு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் செயற்திட்டத்தின் மூன்று அடிப்படை நோக்கங்களில் இரண்டு எய்தப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தின் நேரடி நலனாளிகளாக இருபது பேர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் நேரடியாக 05 குடும்பங்கள் மாத்திரமே கலந்து கொண்டிருந்தனர். மேலும், 2013 திசெம்பர் 31 வரையில் செயற்திட்டத்தின் முன்னேற்றக் கட்டுப்பாடு மற்றும் பின்தொடர் குழுக்கள் நியமிக்கப்படுவதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 7.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

09 நிறுவனங்களினால் மீளாய்வாண்டிற்கு உரித்தாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் காணி, மாகாண நீர்ப்பாசன, கமத்தொழில், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 2013 யூலை 31 ஆம் திகதி வரையிலும் பௌதீக முன்னேற்றம் 75 சதவீதம் வரை முழுமையாக இருக்க வேண்டிய 239 செயற்திட்டங்களில் அந்நாள் வரையில் 201 செயற்திட்டங்கள் வேலை ஆரம்பிக்கப்பட்டேனும் இருக்கவில்லை.

## 7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

மீளாய்வாண்டின் போது 23 அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்காக ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டப்படியும், 02 திணைக்களங்களுக்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் படியும் நடாத்தப்பட்டிருந்ததுடன் 03 அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் தொடர்பாக ஒரு கூட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 7.3 கொள்வனவுத் திட்டம்

11 நிறுவனங்களினால் மீளாய்வாண்டிற்கு உரித்தாக கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் காணி, மாகாண நீர்ப்பாசன, கமத்தொழில், கால்நடை உற்பத்தி மற்றும் கால்நடை சுகாதார மற்றும் மீன்பிடி அலுவல்கள் அமைச்சினால் மீளாய்வாண்டிற்கு உரித்தான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படுகையில் 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது குறித்த மாதிரிகளுக்கு புறம்பாகத் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்க வழிகாட்டல் கைநூலின் 4.2.1(உ) இன் படி 6 மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது நாளாந்தம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமானக் குறியீடு 13 இற்கு உரித்தாக மீளாய்வாண்டின் வருமானம் மதிப்பீடு செய்யப்படுகையில் 2012 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்படாது ரூபா 338,159,267 தொகை குறைவாக வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. மேலும், அந்த சகல வருமானக் குறியீடுகளினதும் 2012 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் 2011 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானத்தைப் பார்க்கிலும் அதிகரித்திருந்தது.

(ஆ) 05 வருமானக் குறியீட்டிற்கு உரித்தாக 2012 ஆம் ஆண்டின் வருமானம் ரூபா 207,371,478 தொகையான போதிலும் 2013 ஆம் ஆண்டின் வருமானம் ரூபா 164,743,536 ஆனமையால் ரூபா 42,627,942 தொகை வருமானத்தில் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் இதற்காக காரணமான விடயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவ் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7.5 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

மாகாண கணக்கீட்டு செயற்குழுவில் கலந்துரையாடப்பட்ட 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகளுக்கு உரித்தான கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட 06 அமைச்சு/ திணைக்களங்களுக்கு உரித்தான 123 கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பாக உரிய சீராக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சப்ரகமுவ மாகாண சபையின் நிறுவனத் தலைவர்களுக்கும் தலைமைச் செயலாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு மற்றும் நிதி கட்டுப்பாடும்
(ஆ) சொத்துக்களும் மனித வளக் கட்டுப்பாடு
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) செயற்திட்ட அமுலாக்கல்
(உ) பாடசாலை முகாமைத்துவம்
(ஊ) வைத்தியசாலை முகாமைத்துவம்